# தாம்பரம் மாநகராட்சி

# 2024-2025

# நிர்வாக அறிக்கை

# தாம்பரம் மாநகராட்சி

## 2024-2025 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

**1. அமைப்பும், மேலாண்மையும்** :-

தாம்பரம் மாநகராட்சி தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரத்தின் பிரதான வாயிலாக ஜி.எஸ்.டி. (Grant Southern Trunk Road) சாலையில் 20 கிலோ மீட்டர் தொலைவில் அமையப்பெற்றுள்ளது.

தாம்பரம் நகராட்சியுடன் பல்லவபுரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர், ஆகிய நகராட்சிகளையும், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, மாடம்பாக்கம், சிட்லபாக்கம், திருநீர்மலை ஆகிய பேரூராட்சிகளையும் இணைத்து அரசாணை எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.11.09.2021-ன்படியும் மற்றும் தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.530 நாள்.03.11.2021-ல் பகுதி IV, பிரிவு 2, தமிழ்நாடு அவசர சட்டம் எண்.5/2021ன்படி தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதன்படி மாநகராட்சியில் 70 வார்டுகளை கொண்டு மொத்த பரப்பளவு 87.64 சதுர கிலோ மீட்டரில் அமைந்துள்ளது.

**1.2. மக்கள் தொகை** :-

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

| | | |
|---|---|---|
| ஆண் | - | 364012, |
| பெண் | - | 358970 |
| மொத்த மக்கள் தொகை | - | 722982 |

**மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 -ன் படி வார்டு வாரியான மக்கள் தொகை விபரம்:-**

| வார்டு எண் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 6420 | 6367 | 12787 |
| 2 | 4203 | 4046 | 8249 |
| 3 | 6018 | 5977 | 11995 |
| 4 | 6038 | 6051 | 12089 |
| 5 | 5146 | 5103 | 10249 |
| 6 | 5921 | 5951 | 11872 |
| 7 | 5029 | 4932 | 9961 |
| 8 | 4998 | 5120 | 10118 |
| 9 | 5011 | 5023 | 10034 |
| 10 | 7770 | 7666 | 15436 |
| 11 | 5313 | 5122 | 10435 |
| 12 | 5273 | 5456 | 10729 |
| 13 | 4291 | 4219 | 8510 |
| 14 | 4349 | 4389 | 8738 |
| 15 | 6331 | 6391 | 12722 |
| 16 | 4827 | 4886 | 9713 |

| வார்டு எண் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 17 | 5860 | 5678 | 11538 |
| 18 | 4555 | 4564 | 9119 |
| 19 | 4271 | 4240 | 8511 |
| 20 | 6174 | 6094 | 12268 |
| 21 | 3891 | 3892 | 7783 |
| 22 | 5702 | 5423 | 11125 |
| 23 | 5046 | 4845 | 9891 |
| 24 | 6048 | 6055 | 12103 |
| 25 | 4810 | 4764 | 9574 |
| 26 | 4692 | 4656 | 9348 |
| 27 | 5708 | 5906 | 11614 |
| 28 | 5744 | 5709 | 11453 |
| 29 | 4975 | 4997 | 9972 |
| 30 | 5822 | 5701 | 11523 |
| 31 | 4570 | 4637 | 9207 |
| 32 | 3063 | 3010 | 6073 |
| 33. | 6995 | 6937 | 13932 |
| 34 | 6032 | 6147 | 12179 |
| 35 | 4902 | 4935 | 9837 |
| 36 | 4598 | 4648 | 9246 |
| 37 | 5762 | 5727 | 11489 |
| 38 | 5353 | 5448 | 10801 |
| 39 | 3527 | 3537 | 7064 |
| 40 | 5322 | 5223 | 10545 |
| 41 | 4155 | 4123 | 8278 |
| 42 | 3980 | 4049 | 8029 |
| 43 | 5549 | 5497 | 11046 |
| 44. | 5865 | 5793 | 11658 |
| 45 | 5305 | 5207 | 10512 |
| 46 | 4717 | 4726 | 9443 |
| 47 | 4664 | 4594 | 9258 |
| 48 | 6331 | 6384 | 12715 |
| 49 | 7314 | 6260 | 13574 |
| 50 | 6488 | 6441 | 12929 |
| 51 | 4929 | 4796 | 9725 |
| 52 | 4752 | 4611 | 9363 |
| 53 | 4844 | 4559 | 9403 |
| 54 | 3783 | 3408 | 7191 |
| 55 | 4198 | 4053 | 8251 |
| 56 | 4386 | 4265 | 8651 |
| 57 | 5075 | 5044 | 10119 |
| 58 | 5135 | 5186 | 10321 |
| 59 | 6357 | 6112 | 12469 |
| 60 | 6063 | 5895 | 11958 |
| 61 | 6662 | 6740 | 13402 |
| 62 | 4073 | 3974 | 8047 |
| 63 | 5045 | 4885 | 9930 |
| 64 | 4910 | 5009 | 9919 |
| 65 | 5182 | 4269 | 9451 |

| வார்டு எண் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 66 | 5721 | 5719 | **11440** |
| 67 | 4806 | 4673 | **9479** |
| 68 | 4383 | 4483 | **8866** |
| 69 | 5713 | 5605 | **11318** |
| 70 | 3267 | 3138 | **6405** |

| | | |
|---|---|---|
| அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் | - | 36 |
| அறிவிக்கப்படாத குடிசைப்பகுதிகள் | - | 71 |
| குடிசைப்பகுதி மக்கள் தொகை | - | 121029 |
| வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் | - | 28199 |

## 2. மாநகராட்சி நிர்வாகம் :-

தாம்பரம் மாநகராட்சியில் மொத்தம் உள்ள 70 வார்டுகளில் மாமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்ய 19.02.2022 அன்று வாக்குப்பதிவு நடைபெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு 02.03.2022 அன்று மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் பதவி பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ஆதி திராவிடர் (பெண்கள்) | - | 6 | வார்டுகள் (4, 12, 13, 27, 31, 51) |
| ஆதிதிராவிடர்(பொது) | - | 5 | வார்டுகள் (8, 11, 15, 16, 32) |
| மகளிர் (பொது) | - | 29 | வார்டுகள் (1, 3, 6, 9, 14, 18, 19, 21, 24, 26, 28, 29, 34, 35, 36, 37, 38, 39, 41, 42, 46, 48, 57, 58, 60, 61, 64, 66, 68) |
| பொது பிரிவினர் | - | 30 | வார்டுகள் (2, 5, 7, 10, 17, 20, 22, 23, 25, 30, 33, 40, 43, 44, 45, 47, 49, 50, 52, 53, 54, 55, 56, 59, 62, 63, 65, 67, 69, 70) |

தாம்பரம் மாநகராட்சியிலுள்ள 70 வார்டுகளை தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.19, நாள்.06.01.2022-ல் பகுதி II, பிரிவு 2ன்படி 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் | வார்டுகள் |
|---|---|---|
| 1 | மண்டலம் - 1 | 1 முதல் 8 வரை, 10 முதல் 12 வரை மற்றும் 29 வரை 31. |
| 2 | மண்டலம் - 2 | 9, 13 முதல் 21 வரை, 24 மற்றும் 26 முதல் 28 வரை. |
| 3 | மண்டலம் - 3 | 22, 23, 25 மற்றும் 34 முதல் 44 வரை. |
| 4 | மண்டலம் – 4 | 32, 33 மற்றும் 49 முதல் 61 வரை. |
| 5 | மண்டலம் – 5 | 45 முதல் 48 வரை மற்றும் 62 முதல் 70 வரை . |

### 2.1 மேயர் :-

மேயருக்கான மறைமுக தேர்தல் 04.03.2022ல் நடத்தப்பட்டு திருமதி.க.வசந்தகுமாரி அவர்கள் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பில் இருந்து வருகிறார்கள்.

**2.2 துணை மேயர் :-**

துணை மேயருக்கான மறைமுக தேர்தல் 04.03.2022ல் நடத்தப்பட்டு திரு.கோ.காமராஜ் அவர்கள் துணை மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பில் இருந்து வருகிறார்கள்.

**2.3 மாமன்ற உறுப்பினர்கள் : -**

| வார்டு எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|
| 1 | திருமதி.கலைவாணி பிரபு பி |
| 2 | திரு.நரேஷ் கண்ணா இரா |
| 3 | திருமதி.வாணிஸ்ரீ எம்.வி |
| 4 | திருமதி.சித்ரா த |
| 5 | திரு.ஜெகநாதன் வெ |
| 6 | திருமதி.கல்யாணி டி |
| 7 | திரு.இன்பசேகர் மு |
| 8 | திருமதி.ரம்யா ச |
| 9 | திருமதி லதா எஸ் |
| 10 | திருமதி.மதினா பேகம் ஆ |
| 11 | திரு.கருணாநிதி வே |
| 12 | திருமதி.சத்யா ம |
| 13 | திருமதி.ரேணுகாதேவி ப |
| 14 | திருமதி.மங்கையர் திலகம் ரா |
| 15 | திரு.ராஜேந்திரன் டி.வி |
| 16 | திரு.நெடுஞ்செழியன் சு |
| 17 | திரு.ஜோசப் அண்ணாதுரை .இ |
| 18 | திருமதி பிரேமலதா ப |
| 19 | திருமதி.பிருந்தாதேவி ஏ |
| 20 | திரு.முத்துகுமார் செ |
| 21 | திருமதி கலைசெல்வி வெ |
| 22 | திரு.கிருஷ்ணமூர்த்தி அ |
| 23 | திரு.கண்ணன் ந |
| 24 | திருமதி.கீதா நா |
| 25 | திரு.செந்தில்குமார் ஆர்.எஸ் |
| 26 | திருமதி.புஸிராபானு நா |
| 27 | திருமதி.மகேஸ்வரி க |
| 28 | திருமதி விஜயலட்சுமி கு |
| 29 | திருமதி.சண்முக சுந்தரி ஜெ |

| வார்டு எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|
| 31 | திருமதி.சித்ராதேவி மு |
| 33 | திரு.சுரேஷ் செ |
| 34 | திருமதி.சுபாஷினி பு |
| 35 | திருமதி.சங்கீதா வி |
| 36 | திருமதி.சரஸ்வதி ச |
| 37 | திருமதி.மகாலட்சுமி க |
| 38 | திருமதி.சரண்யா ச |
| 39 | திருமதி.கிரிஜா ச |
| 40 | திரு.ஜெயபிரதீப் ச |
| 41 | திருமதி.கற்பகம் சு |
| 42 | திருமதி.கல்யாணி ம |
| 43 | திரு.ஜெகன் சி |
| 44 | திரு.ராஜா இரா |
| 45 | திரு.தாமோதரன் ர |
| 46 | திருமதி ரமணி ஆ |
| 47 | திரு.கணேசன் ச |
| 48 | திருமதி.சசிகலா ரா |
| 49 | திரு.காமராஜ் தூ |
| 50 | திரு.யாக்கூப் மு |
| 51 | திருமதி.லிங்கேஸ்வரி ப |
| 52 | திரு.பெரியநாயகம் லூ |
| 53 | திரு.கோபி டி.ஆர் |
| 54 | திருமதி.ஸ்டார் பிரபா |
| 55 | திரு.புகழேந்தி பெ |
| 56 | திரு.சேகர் சி |
| 57 | திருமதி.கமலா சே |
| 58 | திருமதி.மதுமிதா ச |
| 59 | திருமதி.இராஜேஸ்வரி ச |
| 60 | திருமதி.கீதா வே |
| 61 | திருமதி.ஹேமாவதி சே |
| 62 | திரு.இந்திரன் சு |
| 63 | திரு.ஜோதிகுமார் ப |
| 64 | திருமதி.ஷகிலா ஜான்சி மேரி |
| 65 | திரு.சங்கர் க |
| 66 | திருமதி.வாணி |
| 67 | திரு.நடராஜன் ஆ |
| 68 | திருமதி.ரமாதேவி செ |
| 69 | திரு.ராஜ் கி |
| 70 | திரு.தேவேந்திரன் மு |

2.4 மண்டல குழுத்தலைவர்

மண்டல குழுத்தலைவர்களுக்கான மறைமுக தேர்தல் 30.03.2022ல் நடத்தப்பட்டு 5 மண்டலங்களுக்கான குழுத்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பில் இருந்து வருகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | வார்டு எண். | மண்டல குழுத்தலைவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | மண்டலம் - 1 | 11 | திரு.கருணாநிதி வே |
| 2 | மண்டலம் - 2 | 17 | திரு.ஜோசப் அண்ணாதுரை .இ |
| 3 | மண்டலம் - 3 | 40 | திரு.ஜெயபிரதீப் ச |
| 4 | மண்டலம் – 4 | 49 | திரு.காமராஜ் தூ |
| 5 | மண்டலம் – 5 | 62 | திரு.இந்திரன் சு |

2.5 நியமனக்குழு உறுப்பினர்

நியமனக்குழு உறுப்பினருக்கான மறைமுக தேர்தல் 31.03.2022 நடத்தப்பட்டு கீழ்க்கண்ட நியமனக்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனக்குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து வருகிறார்கள்.

**நியமனக்குழு உறுப்பினர்**

| வார்டு எண் | தலைவர் பெயர் |
|---|---|
| 56 | திரு.சேகர் சி |

**கணக்கு குழு தலைவர்**

| வார்டு எண் | தலைவர் பெயர் |
|---|---|
| 10 | திருமதி.மதினா பேகம் ஆ |

**கணக்கு குழு உறுப்பினர்கள்**

| வ.எண் | வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 18 | பி. பிரேமலதா |
| 2 | 10 | மதினா பேகம் .ஆ |
| 3 | 33 | செ. சுரேஷ் |
| 4 | 55 | பெ. புகழேந்தி |
| 5 | 50 | மு. யாக்கூப் |
| 6 | 64 | ஷகிலா ஜான்சி மேரி |

**பொதுசுகாதார குழு தலைவர்**

| வார்டு எண் | தலைவர் பெயர் |
|---|---|
| 2 | திரு.நரேஷ் கண்ணா இரா |

**பொதுசுகாதார குழு உறுப்பினர்கள்**

| வ.எண் | வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 2 | இரா. நரேஷ் கண்ணா |
| 2 | 42 | ம. கல்யாணி |
| 3 | 16 | சு. நெடுஞ்செழியன் |
| 4 | 31 | மு. சித்ராதேவி |
| 5 | 68 | செ. ரமாதேவி |
| 6 | 20 | செ. முத்துகுமார் |

**கல்விக் குழு தலைவர்**

| வார்டு எண் | தலைவர் பெயர் |
|---|---|
| 41 | திருமதி.கற்பகம் சு |

**கல்விக் குழு உறுப்பினர்கள்**

| வ.எண் | வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 44 | இரா. ராஜா |
| 2 | 45 | ர. தாமோதரன் |
| 3 | 48 | ரா. சசிகலா |
| 4 | 8 | ச. ரம்யா |
| 5 | 41 | சு. கற்பகம் |
| 6 | 23 | ந. கண்ணன் |

**வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு தலைவர்**

| வார்டு எண் | தலைவர் பெயர் |
|---|---|
| 46 | திருமதி ரமணி ஆ |

**வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு உறுப்பினர்கள்**

| வ.எண் | வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 63 | ப. ஜோதிகுமார் |
| 2 | 28 | கு. விஜயலட்சுமி |
| 3 | 7 | மு. இன்பசேகர் |
| 4 | 36 | ச. சரஸ்வதி |
| 5 | 9 | எஸ். லதா |
| 6 | 46 | ஆ. ரமணி |

**நகரமைப்பு குழு தலைவர்**

| வார்டு எண் | தலைவர் பெயர் |
|---|---|
| 67 | திரு.நடராஜன் ஆ |

**நகரமைப்பு குழு உறுப்பினர்**

| வ.எண் | வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 15 | டி.வி. ராஜேந்திரன் |
| 2 | 53 | டி.ஆர். கோபி |
| 3 | 35 | வி. சங்கீதா |
| 4 | 1 | பி. கலைவாணி பிரபு |
| 5 | 67 | ஆ. நடராஜன் |
| 6 | 26 | நா. புஸிராபானு |

**பணிகள் குழு தலைவர்**

| வார்டு எண் | தலைவர் பெயர் |
|---|---|
| 29 | திருமதி.சண்முக சுந்தரி ஜெ |

**பணிகள் குழு உறுப்பினர்**

| வ.எண் | வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 38 | ச. சரண்யா |
| 2 | 29 | ஜெ. சண்முக சுந்தரி |
| 3 | 59 | ச. இராஜேஸ்வரி |
| 4 | 43 | சி. ஜெகன் |
| 5 | 4 | த. சித்ரா |
| 6 | 6 | டி. கல்யாணி |

## 3. ஆணையாளர்

இம்மாநகராட்சியின் ஆணையாளராக திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் 03.02.2023 முதல் 19.07.2024 வரையிலும், திரு.சீ. பாலச்சந்தர் இ.ஆப., 19.07.2024 முதல் நாளது தேதி மாநகராட்சி ஆணையாளராக பணிபுரிந்து வருகிறார்.

**அரசாணை(நிலை)எண் 152, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.7)துறை, நாள்.20.10.2022-ன் படி இம்மாநகராட்சியின் பதவி மற்றும் பணியிடங்கள் எண்ணிக்கை விவரம்**

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆணையாளர் | 1 |
| 2 | துணை ஆணையாளர் | 2 |
| 3 | உதவி ஆணையாளர் (சிறப்பு நிலை) | 5 |

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 4 | உதவி ஆணையாளர்(வருவாய்) (தேர்வு நிலை) | 1 |
| 5 | உதவி ஆணையாளர்(பணியாளர்) (தேர்வு நிலை) | 1 |
| 6 | உதவி ஆணையாளர்(கணக்கு) (தேர்வு நிலை) | 1 |
| 7 | கணக்கு அலுவலர் | 1 |
| 8 | மாமன்ற செயலாளர் | 1 |
| 9 | மக்கள் தொடர்பு அலுவலர் | 1 |
| 10 | நிர்வாக அலுவலர் | 5 |
| 11 | வருவாய் அலுவலர் | 1 |
| 12 | கண்காணிப்பாளர் | 16 |
| 13 | உதவி வருவாய் அலுவலர் | 5 |
| 14 | உதவியாளர் | 23 |
| 15 | நேர்முக உதவியாளர் | 3 |
| 16 | இளநிலை உதவியாளர் | 46 |
| 17 | ஓட்டுனர் | 3 |
| 18 | மாநகர் நல அலுவலர் | 1 |
| 19 | உதவி மாநகர் நல அலுவலர் | 1 |
| 20 | கால்நடை மருத்துவ அலுவலர் | 1 |
| 21 | துப்புரவு அலுவலர் | 5 |
| 22 | துப்புரவு ஆய்வர் | 25 |
| 23 | பூச்சியியல் நிபுணர் | 1 |
| 24 | மாநகரப் பொறியாளர் (தலைமைப் பொறியாளர் நிலை) | 1 |
| 25 | துணை மாநகரப் பொறியாளர் (செயற்பொறியாளர் நிலை) | 3 |
| 26 | மண்டல பொறியாளர் (செயற்பொறியாளர் நிலை) | 5 |
| 27 | உதவி செயற்பொறியாளர் | 5 |
| 28 | உதவி பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் | 25 |
| 29 | வரைவாளர் | 8 |
| 30 | தொழில்நுட்ப உதவியாளர் / பணி மேற்பார்வையாளர் | 50 |
| 31 | மின்பொறி கண்காணிப்பாளர் (தொழில்நுட்ப உதவியாளர் நிலையில்) | 1 |
| 32 | இளநிலை பொறியாளர் (இயந்திரவியல் / ஆட்டோ மொபைல் பொறியியல் ) | 1 |

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 33 | நகர திட்டமிடுநர் (செயற்பொறியாளர் நிலை) | 1 |
| 34 | உதவி நகர திட்டமிடுநர் (உதவி செயற்பொறியாளர் நிலை) | 10 |
| 35 | நகரமைப்பு ஆய்வர் (உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் நிலையில்) | 10 |
| | மொத்தம் | 270 |

**3.1 பணியமைப்பு செலவினங்கள்:-**

பொதுப்பிரிவு, வருவாய்பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரம் மற்றும் வெளிக்கொணர்வு பணியாளர்களுக்கு செலுத்தப்படும் பணியமைப்புச் செலவினம் 2022-2023ஆம் ஆண்டில் ரூ.110.82 கோடியாக ஆக உள்ளது.

**3.2 கணிப்பொறி பிரிவு :-**

இம்மாநகராட்சியில் உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் புள்ளி விவர குறிப்பாளர்கள் கொண்டு இயங்குகிறது. இவர்களும் மாநகராட்சியின் இதர பிரிவு பணியாளர்களும் இணைந்து மாநகராட்சியின் பொது பிரிவு, கணக்கு பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு ஆகிய பணிகளை கணினி மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.. மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மின் ஆளுமையின் மூலம் பெறப்படும் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

**4. வருவாய் மற்றும் செலவினம்**

**2021-2022ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவினம் கணக்குகளின் விவரங்கள்**

**(ரூபாய் கோடியில்)**

| தொடக்க இருப்பு | வரவு | செலவு | இறுதி இருப்பு |
|---|---|---|---|
| 112.80 | 292.39 | 230.01 | 175.18 |

**4.1 மூலதன செலவுகள்**

கட்டிடங்கள் கட்டுவதற்கும், சாலை அமைக்கவும் அறிக்கை ஆண்டில் ரூ.11.78 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**4.2 கடன்கள் :-**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | கடன் பெறப்பட்ட நிதி நிறுவனம் | கடன் பெறப்பட்டதற்குரிய விவரம் | 31.03.2022-ல் நிலுவையிலுள்ள கடன்கள் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை மேம்பாட்டு நிறுவனம் | கடன் | 38.70 |
| 2 | தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் | கடன் | 98.83 |
| **பிற அரசு துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை** | | | |
| 1 | சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் | குடிநீர் கட்டணம் | 7.14 |
| 2 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் | குடிநீர் கட்டணம் | 0.12 |
| 3 | சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் | குடிநீர் அபிவிருத்தி திட்ட பங்குத் தொகை | 12.80 |
| 4 | திட்டப்பணிகளின் மாநகராட்சி பங்குத்தொகை | | 15.00 |
| 5 | பாதாள சாக்கடை திட்டம் | பராமரிப்பு கட்டணம் | 0.00 |
| 6 | மின்வாரியம் | மின்கட்டணம் | 2.56 |
| | | **மொத்தம்** | 37.62 |

**4.3 வருவாய் இனங்கள்**

2024-2025 ஆம் ஆண்டிற்கான சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் இதர இனங்களுக்கான கேட்பு வசூல் மற்றும் நிலுவை விபரம்

(ரூ.இலட்சத்தில்)

| **இனம்** | **கேட்பு** | | | **வசூல்** | | | **நிலுவை** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| சொத்து வரி | 3674.13 | 5827.81 | 9501.94 | 1375,17 | 4450.42 | 5825.59 | 2298,96 | 1377.39 | 3676,35 |
| தொழில்வரி | 554.90 | 1971.05 | 2525.95 | 286.79 | 1881.26 | 2168.05 | 268,11 | 89,79 | 357.90 |
| குடிநீர் கட்டணம் | 791 | 608.75 | 1399.75 | 155.39 | 333.19 | 488.58 | 635.61 | 275.56 | 911.17 |
| பாதள சாக்கடை இணைப்பு கட்டணம் | 860.94 | 761.13 | 1622.07 | 320.63 | 451.80 | 772.43 | 540.31 | 309.33 | 849.64 |
| வரியில்லா இனம் | 610.32 | 462.50 | 1072.82 | 184.89 | 341.27 | 526.16 | 425.43 | 121.23 | 546.66 |
| காலிமனை வரி | 924.51 | 176.46 | 1100.97 | 663.71 | 53.00 | 716.71 | 260.80 | 123.46 | 384.26 |
| குப்பை சேவை வரி | 518.72 | 1052.75 | 1571,47 | 217.81 | 720.75 | 938.56 | 300.91 | 332,01 | 632.92 |
| **மொத்தம்** | **7934.52** | **10860.45** | **18794.97** | **3204.39** | **8231.69** | **11436.08** | **4730.13** | **2628.77** | **7358.90** |

**5. வழக்குகள் :-**

அறிக்கையாண்டில் வழக்குகளுக்காக ரூ.5.35 இலட்சம் செலவழிக்கப்பட்டது. அறிக்கையாண்டின் வழக்குகள் நிலுவை விவரம்.

| வ. எண். | இனம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 16 |
| 2 | கட்டிடம் (நகரமைப்பு பிரிவு) | 63 |
| 3 | கடைகள் குத்தகை | 16 |
| 4 | நிர்வாகம்(பணியமைப்பு) | 8 |
| 5 | பொது சுகாதார பிரிவு | 7 |
| 6 | பொறியியல் பிரிவு | 3 |
| 7 | தேசிய பசுமை தீர்ப்பாய வழக்குகள்(NGT) | 21 |
| | **மொத்தம்** | **134** |

## 6. தீயணைப்பு :-

தாம்பரம் நகரில் தீயணைப்பு துறை இல்லை. இருப்பினும் மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள சானடோரியம் பகுதியில் தீயணைப்பு துறை உள்ளது. அலுவலகக் கட்டிடத்தில் தீ தடுப்பு முன்னெச்சரிக்கையாக பக்கெட்டில் மணல், தண்ணீர் முதலியனவும் தீத்தடுப்பு சாதனங்களும் வைக்கப்பட்டுள்ளது.

7. நகரமைப்பு பிரிவு :

தாம்பரம் மாநகராட்சி ஒருங்கிணைந்த உள்ளூர் திட்ட குழுமமான சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இயங்கி வருகிறது.

7.1 நகரளவை :

இம்மாநகராட்சியில் ஏற்கனவே பணி புரிந்த நில அளவையர் மீண்டும் வருவாய் துறைக்கு சென்றுவிட்டதால் தற்போது நில அளவையர் பணி வருவாய் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.2 நகரமைப்பு பிரிவின்கீழ் பெறப்படும் வருவாய்கள் :

நகரமைப்பு பிரிவில் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து 2022 – 2023 அறிக்கையாண்டில் வருவாய் கிடைக்கப் பெற்றது.

| வ.எண் | உரிமங்களின் விவரம் வருவாய் | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கட்டிடங்கள் கட்டுவதற்கான உரிமம் (BL) | 722.55 |
| 2. | அபிவிருத்திக்கட்டணம் (DC) (Reg) | 298.73 |
| 3. | மனைஉட்பிரிவு கட்டணம் (SD) | 14.18 |
| 4. | மனைப்பிரிவு உரிம கட்டணம் (Layout Licence Fees) | 14.59 |
| 5. | சாலையமைப்பு கட்டணம் (RF) | 4.04 |
| மொத்தம் | | **1054.09** |

**8. பேருந்து நிலையம்** : -

இம்மாநகராட்சி பகுதியில் ஜி.எஸ்.டி. சாலை கடப்பேரி பகுதியில் பேருந்து நிலையம் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**9. கல்வி நிலையங்கள்** :-

இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படி மாநகராட்சி பள்ளிகள் செயல்படுகிறது.

| வ.எண் | பள்ளியின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மேல்நிலைப்பள்ளி | 6 |
| 2. | உயர்நிலை பள்ளி | 2 |
| 3. | நடுநிலை பள்ளி | 6 |
| 4. | ஆரம்பப் பள்ளி | 15 |
| | **மொத்தம்** | 29 |

மேற்படி பள்ளிகளின் நிர்வாகம் கல்வித்துறைக்கு சென்றாலும், மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து பராமரிக்கப்படுகிறது.

**10. பொது நூல் நிலையங்கள்** :-

தாம்பரம் மாநகராட்சியில் மாவட்ட நூலகத்துறை மூலம் 13 நூலகங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | பகுதி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தாம்பரம் | 3 |
| 2. | பல்லாவரம் | 3 |
| 3. | பம்மல் | 1 |
| 4. | அனகாபுத்தூர் | 1 |
| 5. | செம்பாக்கம் | 1 |
| 6. | மாடம்பாக்கம் | 1 |
| 7. | சிட்லபாக்கம் | 1 |
| 8. | பெருங்களத்தூர் | 1 |
| 9. | பீர்க்கன்காரணை | 1 |
| | **மொத்தம்** | 13 |

**11. பள்ளி சத்துணவு மையங்கள்**:-

இம்மாநகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் 13 பள்ளிகளில் சத்துணவு திட்டத்தின் கீழ் 5219 மாணவ மாணவிகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிக்கு 13 , சத்துணவு அமைப்பாளர்கள், 15 சமையலர்கள் மற்றும் 15 சமையல் உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இதற்கான பராமரிப்பு செலவு முழுவதும் அரசாங்கத்திடமி ருந்து மான்யமாக பெறப்படுகிறது.

**12. தணிக்கைகள் :-**

ஆண்டு தொடக்கத்தில் 3104 தணிக்கைத்தடைகள் நிலுவையாக இருந்தது. ஆண்டு இறுதியில் 2433 தணிக்கைத்தடைகள் நிலுவையாக உ.ள்ளது.

**13.பொறியியல் பிரிவு :-**

இம்மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர்களாக திரு.,கோ.ஆனந்தஜோதி மற்றும் திருமதி. ஆர்.பெட்சிஞானலதா ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள்.

**13.1 சாலைகள்**

அறிக்கையாண்டு முடிவில் கீழ்க்கண்ட பல்வேறு 993.344 கி.மீ சாலைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டது

| வ. எண் | சாலைகளின் வகை | எண்ணிக்கை | 31.03.2023-ல் சாலைகளின் நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலைகள் | 2379 | 263.06 |
| 2 | தார் சாலைகள் | 4234 | 663.24 |
| 3 | கருங்கல் சாலைகள் | 55 | 5.01 |
| 4 | மண் சாலைகள் | 88 | 11.79 |
| 5 | பேவர் பிளாக் சாலைகள் | 393 | 36.97 |
| 6 | பிற சாலைகள் | 3 | 0. 39 |
| | **மொத்தம்** | 7152 | 980.46 |

மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைகள் யாவும் சாலை பணியாளர்களைக் கொண்டு அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையில் வைக்கப்பட்டது. இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஜல்லிகல் தோண்டியெடுக்கும் இடம் இல்லை. மாநகராட்சி பணிகளுக்குத் தேவைப்படும் ஜல்லிக்கற்கள் 64.40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வெம்பாக்கத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. இம்மாநகராட்சியின் எல்லைக்குள் நெடுஞ்சாலைத்துறையினரால் தூசி படியாத சாலைகள் 19.60 மீட்டர் சாலை பராமரிக்கப்பட்டு வந்தது.

1. 2024-25 ஆம் ஆண்டிற்கு TURIP திட்ட நிதியின் கீழ் 12..621 கி.மீ. நீளத்தில் 82 சாலைகள் ரூ.990.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
2. NSMT 2024-25 திட்ட நிதியின் கீழ் 9.89 கோடி மதிப்பீட்டில் 11 தொகுப்பாக பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.
3. மேலும், TURIP 2024-25 மற்றும் NSMT 2023-24 திட்ட நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு ஒத்திசைவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

4. 7 இடங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதற்கு 7 MCC பசுமை உரக்குடில்கள் அமைக்க பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்க 5 பொது சமையலறைகள் கட்டுவதற்கும், உணவு விநியோகம் செய்வதற்கும் உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.
6. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளிகளில் சிறிய அளவிலான மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.
7. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் வெளிகொணர்வு முகமை மூலம் பணிகள் மற்றும் வாகனங்கள் மூலம் செயல்படுத்துவதற்கு, அரசாணை நிலை எண்.116 MAWS Dept (ME3) நாள்.24.08.22ன்படி ரூ.6224.23 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணி ஆரம்ப நிலையில் உள்ளது.
8. SBM 2.0 திட்டம் 2024-25 ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொது கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் கட்டுமான பணிகள் அனைத்தும் முடிவுறும் நிலையில் உள்ளது.
9. KNMT நவீன எரிவாயு தகன மேடைகள் ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் மாடம்பாக்கம் மற்றும் சேலைரில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. மேலும், 2023-24 ஆம் ஆண்டிற்கான திட்ட நிதி CGF ஒதுக்கீட்டில் 3 பணிகள் நடைபெற்று வருகிறது.

**13.2 பாலங்கள் தரைப்பாலங்கள்** :

இம்மாநகராட்சியில் 5 மேம்பாலங்கள் 2 சுரங்க நடைபாதை 1 சுரங்க வழிப்பாதை நெடுஞ்சாலை துறையினால் பராமரிக்கப்படுகிறது. அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.151.30 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் 50சதவீத பங்களிப்பு தொகையுடன் 8 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது..

**13.3 கட்டிடங்கள்** :-

இம்மாநகராட்சியின் மாமன்றத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் யாவும் நல்ல முறையில் மாநகராட்சி நிதி நிலைக்கு ஏற்ப பராமரிக்கப்பட்டு வருகிறது. தேவையான பழுது பார்த்தல் வேலைகளும் அவ்வப்போது செய்யப்பட்டது.

மாநகராட்சி புதிய கட்டிடம் கட்டுவதற்கு மாதிரி வரைபடங்கள் தயாரித்து தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அறிவுசார் மையம் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. இவ்வாண்டு பயன்பாட்டிற்கும் வரும்.

ரூ.166.40 இலட்சம் மதிப்பீட்டில் 2 பூங்கா பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் தினசரி நாளங்காடி முடிவுறும் நிலையில் உள்ளது.

ரூ.வெள்ள தடுப்பு Flood Mitigation Fund 2023-24 நிதியின் கீழ் 12 மழைநீர் வடிகால்வாய்கள் 12.461 கி.மீ. நீளத்திற்கு ரூ.37.59 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

ரூ.113.00 மதிப்பீட்டில் 2 குளங்கள் சீரமைப்பு பணிகள் தொடர் நடவடிக்கையில் உள்ளது.

13.4 குடிநீர் ஆதாரம்:

மாநகராட்சி பொதுமக்களின் தேவைக்கான குடிநீர் பாலாறு படுகையில் அமைந்துள்ள மேலச்சேரி, வில்லியம்பாக்கம், உள்ளாவூர், பழையசீவரம் போன்ற நீரேற்று நிலையங்களிலிருந்தும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் உள்ளுர் நீர் ஆதாரங்களை கொண்டும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

13.5 குடிநீர் திட்டம்

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி வாழ் மக்களுக்கு கீழ்கண்டவாறு குடிநீர் பெறப்படுகிறது.

| வ. எண் | மாநகராட்சியின் பகுதி | நீர் ஆதாரம் ( குடிநீர் அளவு (MLD ) | | | | கால அளவு | Litre/ Person |
|---|---|---|---|---|---|---|---|
| | | பாலாறு | உள்ளுர் நீர் ஆதாரம் | METRO | TWAD | | |
| 1 | தாம்பரம் | 10.00 | 0 | 0 | 0 | 5 மற்றும் 7 நாட்களுக்கு | 135 |
| 2 | பல்லவபுரம் | 0 | 1.07 | 8.00 | 3.00 | 3 நாட்கள் | 135 |
| 3 | பம்மல் | 0 | 3.00 | 6.50 | - | 3 நாட்கள் | 90 |
| 4 | அனகாபுத்தூர் | 0 | 3.00 | 2.00 | - | 7 நாட்கள் | 90 |
| 5 | செம்பாக்கம் | 0 | 9.42 | 0 | 0 | தினசரி | 90 |
| 6 | பெருங்களத்தூர் | 0 | 6.70 | 0 | 0 | 2 நாட்கள் | 90 |
| 7 | பீர்க்கன்கரணை | | | | | | |
| 8 | சிட்லப்பாக்கம் | 0 | 0.17 | 4.40 | 1.50 | 2 மற்றும் 4 நாட்கள் | 90 |
| 9 | மாடம்பாக்கம் | 0 | 3.60 | 0 | 0 | 2 நாட்கள் | 90 |
| 10 | திருநீர்மலை | 0 | 2.40 | 0 | 0.50 | 7 நாட்கள் | 90 |
| | **மொத்தம்** | **10** | **29.36** | **20.90** | **5.00** | | |

13.6 மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் நிலைகள் விவரம். :-

1. பொதுக்கிணறுகள் - 110
2. ஆழ்துளை கிணறுகள் - ----
3. விசைக்குழாய்கள் - 1932
4. பொதுக்குழாய்கள் - 8599

அறிக்கையாண்டு வரை குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டது.

தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் நடைமுறையில் உள்ள குடிநீர் உபவிதிகளின்படி வைப்புத்தொகை மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது.

13.7 குடிநீர் தேவை

நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் மற்றும் 90 லிட்டர் என்ற அடிப்படையில் மாநகராட்சியின் தினசரி குடிநீர் தேவை 123.09 MLD தேவைப்படுகிறது.

**13.8 லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம்**

மேலும் குடிநீர் விநியோக குழாய்கள் இல்லாத பகுதிகளிலும், மேடான பகுதிகளிலும் தற்சமயம் அவசர தேவை என தெரிவிக்கும் இடங்களிலும், மாநகராட்சியில் உள்ள 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 டேங்கர் லாரிகள் மூலம் உடனுக்குடன் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**13.9 குடிநீர் அல்லாத பிற உபயோகங்கள்;**

மேலும் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கென அமைக்கப்பட்டுள்ள 1932 சிறுமின் விசை இறைப்பான்கள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யபப்பட்டு வருகிறது.

**13.10 . குடிநீர் திட்ட அபிவிருத்திப் பணிகள்;**

பல்லவபுரம் பகுதியில் ரூ.130.00 கோடியிலும், பம்மல் பகுதியில் ரூ.58.54 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. அனகாபுத்தூர் பகுதியில் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள செம்பாக்கம், சிட்லபாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, மாடம்பாக்கம் மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஏதுமில்லை.

எனவே, புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ள கால அவகாசம் தேவைப்படுவதால் மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டும் தற்போதைய குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடும் நோக்கில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022- 23ன் கீழ், கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

- திருநீர்மலை பகுதியில் 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.
- திரிசூலம் பகுதியில் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 1.61 கி.மீ. நீளத்திற்கு பிரதான குழாய் மற்றும் பாரதி நகர் பகுதியில் தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.
- பல்லாவரம் பகுதியில் நேதாஜி நகர் முதல் அஸ்தினாபுரம் பகுதி ராஜேந்திரபிரசாத் சாலை வரை ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பெருங்களத்தூர் பகுதியில் 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கடப்பேரி பஜனை கோவில் தெருவில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கடப்பேரி பஜனை கோவில் தெருவில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி ரூ-33.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மேற்கு தாம்பரம் CTO காலனி தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியிலிருந்து திருநீர்மலை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை பிரதான குழாய் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மாடம்பாக்கம் பகுதியில் 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து 5.00 MLD கூடுதலாக பெறுவதற்கு உரிய கருத்துரு தயார் செய்யப்பட்டு வருகிறது.
- மூவரசம்பட்டு மற்றும் திரிசூலம் பகுதிகளில் மூலதன நிதி 2020-21ன் கீழ் 1.50 MLD மற்றும் 2.00 MLD கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (R.O Plants) ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்டு வரும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.
- பம்மல் பகுதியிலுள்ள குவாரியிலிருந்து 1.50 MLD சுத்திகரிப்பு செய்து பொது மக்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தாம்பரம் மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகையின் அடிப்படையில் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடும் நோக்கில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023-24ன் கீழ் 35 பணிகள் ரூ.1556.20 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 02.05.2023ல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், வேங்கைவாசல், நன்மங்கலம், கோவிலம்பாக்கம், மேடவாக்கம், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம், அகரம் தென், மதுரப்பாக்கம், திருவஞ்சேரி, முடிச்சூர், கவுல்பஜார் , மூவரசம்பட்டு, பொழிச்சலூர் மற்றும் திரிசூலம் ஆகிய ஊரக உள்ளாட்சிகளும் சேர்த்து 2026 ஆம் ஆண்டில் தாம்பரம் மாநகராட்சியுடன்

இணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்படி அனைத்து பகுதிகளுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த குடிநீர் விநியோக திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கழகத்தின் (TNUIFSL) வாயிலாக M/s.MSV International and Vidya Consultant என்ற தனியார் கலந்தாய்வர் (Private Consultancy) நியமிக்கப்பட்டு ரூ.1500.00 கோடியில் விரிவான திட்ட அறிக்கை ( Detailed Project Report) தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினால் அமைக்கப்பட்டு வரும் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் தினசரி 100 MLD குடிநீர் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**13.11. தற்போதைய குடிநீர் விநியோக நிலை**

தாம்பரம் மாநகராட்சியின் பரப்பளவு 87.64 சதுர கி.மீ. ஆகும். இம்மாநகராட்சியின் 2020-21 ஆம் ஆண்டு மக்கள் தொகை _______ ஆகும். இம்மாநகராட்சியில் மொத்தம் 70 வார்டுகள் உள்ளன. குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் 118 MLD தேவைப்படுகிறது.

தற்போது தினவரி 75 MLD குடிநீர் மாநகராட்சிக்கு சொந்த நீர் ஆதாரங்கள், பாலாறு படுகை தாம்பரம் குடிநீர் திட்டம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறை ஆகியவற்றின் மூலம் 81 LPCD வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**13.12 தெரு விளக்குகள் :-**

இவ்வாண்டில் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த மின் விளக்குகளின் எண்ணிக்கை 42902 விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Tube lights - 40 watts | 19504 |
| 2 | LED 20W | 196 |
| 3 | LED 30W | 1381 |
| 4 | LED 40W | 70 |
| 5 | LED 50W | 1973 |
| 6 | LED 60W | 306 |
| 7 | LED 90W | 1343 |
| 8 | LED 100W | 86 |
| 9 | LED 120W | 473 |
| 10 | LED 150W | 463 |
| 11 | LED 200W | 1232 |
| 12 | CFL Lights | 8362 |
| 13 | 250W SVL | 9185 |

| | | |
|---|---|---|
| 14 | 400W SVL | 752 |
| | மொத்தம் | 45326 |

தாம்பரம் மாநகராட்சி அனைத்து பகுதிகளில் உள்ள 45326 எண்ணம் தெருவிளக்குகளில் 37803 மின்விளக்குளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றிடும் நோக்கில் ரூ.48.33 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு SUIDF திட்டத்தின் மூலம் கடன் பெற்று 23.12.2022ல் ஒப்பந்தப்புள்ளி 5 சிப்பங்களாக பெறப்பட்டு உரிய வழிமுறைகளின்படி உத்தரவு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. இப்பணி 01.06.2023 முதல் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாநகராட்சி பகுதிகளில் விடுபட்ட புதிய குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய பிரதான சாலைகளில் புதியதாக LED மின் விளக்குகள் 3634 எண்ணிக்கைகள் மதிப்பீடு தொகை ரூ.647.96 இலட்சத்திற்கு SUIDF கடன் திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்.36 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.10.03.2023ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### 13.13 பாதாள சாக்கடை திட்டம்

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 993.344 நீளத்திற்கு மாநகராட்சி சாலைகளும், 64.406 கி.மீ நீளத்தில் நெடுஞ்சாலை துறை சாலைகளும், 749.696 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் அமைந்துள்ளன.

இதில் பல்லவபுரம் பகுதியில் ரூ. 75.33 கோடி மதிப்பீட்டில் 159.74 கி.மீ நீளத்திலும், விடுப்பட்ட பகுதிகளுக்கு ரூ.42.00 கோடி மதிப்பீட்டில் 42.00 கி.மீட்டர் நீளத்தில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. தாம்பரம் பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் ரூ. 160.69 கோடி மதிப்பீட்டில் ரூ.177.181 கி.மிட்டர் நீளத்தில் 85 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மேலும் அனகாபுத்தூர் மற்றும் பம்மல் ஆகிய பகுதிகளுக்கு ரூ. 211.15 கோடி மதிப்பீட்டில் 100.315 கி.மி நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள 26.02.2021ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு, தற்போது பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

மேற்படி மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்காரணை மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஏதும் வகுக்கப்படவில்லை. எனவே தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் விடுப்பட்ட பகுதிகள் ஆகியவற்றினை ஆய்வு செய்து அதன் அறிக்கையின் அடிப்படையிலும், நகரின் மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டு எதிர்வரும் காலங்களில் தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் பொது சுகாதார சீர்கேடு ஏதும் நிகழா பொருட்டு, தாம்பரம் மாநகராட்சிக்கென ஒரு புதிய ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் வகுக்கப்பட வேண்டியுள்ளதாலும், நகரின் அனைத்து பகுதிகளுக்கும் முழு சுகாதாரம் பேணுதல் முக்கியத்துவத்தினை கருதியும், கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உரிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

13.14 **பூங்காக்கள்** :-

இம்மாநகராட்சியில் 225 எண்ணம் பூங்காக்கள் அமைந்துள்ளன. அதில் 193 எண்ணம் பூங்காக்கள் மேம்பாடு செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. 32 எண்ணம் பூங்காக்கள் புனரமைப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## பொது சுகாதாரம் :-

தாம்பரம் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மாநகர் நல அலுவலர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதார பிரிவில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. திடக்ககழிவு மேலாண்மை
2. தூய்மை இந்தியா திட்டம்
3. நகர்புற சுகாதார மையங்கள்
4. தாய் சேய் நல சேவைகள்
5. குடும்ப நலத் திட்டம்
6. தொற்று நோய் மேலாண்மை
7. தொற்றா நோய் மேலாண்மை
8. வருமுன் காப்போம் திட்டம்
9. COTPA
10. நகர்புற பொது சுகாதார ஆய்வகம் (City Public Health Laboratory)
11. பிறப்பு இறப்பு பதிவேடு பராமரித்தல் (CRS)
12. தொழில் உரிமம் வழங்குதல்
13. கால்நடை தடுப்பு பணிகள்
14. தெருநாய்கள் இனப்பெருக்க தடை
15. பன்றி தடுப்பு பணிகள்
16. கட்டிட இடிபாட்டுக் கழிவு
17. மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றுவதற்கு தடை
18. சமுதாய கழிப்பிடம் / பொது கழிப்பிடம்
19. அரசு உதவி பெறும் பள்ளி / மாநகராட்சி பள்ளிகளின் கழிவறை (ம) சுற்றுப்புற பராமரிப்பு

## திடக்கழிவு மேலாண்மை திட்டம் :-

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி செயலாக்கம் செய்வதற்கான நவீன யுத்திகளை கையாண்டு "தாம்பரம் மாநகரம் குப்பையில்லா மாநகரமாக" செயல்படுத்த செயல் திட்டம் வகுக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகளை பின்பற்றி தினசரி திடக்கழிவுகளை பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. தினசரி சேகரமாகும் மக்கும் தன்மையுள்ள ஈரக்கழிவுகளை இம்மாநகாரட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 36 பசுமை உரக்குடில்கள் மற்றும் 53 நிகழ்விட நுண் உரக்குடில்கள் மூலம் இயற்கை உரமாக மாற்றும் பணி நடை பெற்று வருகிறது. இவ்வாறு தினசரி சராசரி 90 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் உரமாக மாற்றம் செய்யப்பட்டு செழிப்பு என்ற பெயரில் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

மக்காத தன்மையுள்ள உலர் கழிவுகளை சேகரித்து விற்பனைக்கு உகந்தவைகளை பிரதி வாரம் புதன்கிழமை தோறும் விற்பனை செய்து அதன் முலம் கிடைக்கும் வருவாயை தூய்மை பணியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது, மீதமுள்ள விற்பனைக்கு இயலாத உலர் கழிவுகளை சிமெண்ட் தயாரிப்பு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

## <u>தூய்மை இந்தியா திட்டம்</u> :-

தாம்பரம் மாநகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு 35 - பரப்புரையாளர்கள் மற்றும் 5- மேற்பார்வையாளர்கள், 1 - ஒருங்கிணைப்பாளர் வெளிக்கொணர்வு மூலம் பெற்று திறந்த வெளி கழிப்பிடமற்ற மாநகராட்சியாகவும், குப்பையில்லா மாநகரமாக மாற்றவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பரப்புரையாளர்கள் மூலம் கழிப்பிடம் இல்லாத வீடுகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு, தனி நபர் கழிப்பிடம் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## <u>பொது சுகாதாரப் பணிக்கான வாகனங்கள்</u> :-

மாநகராட்சி பகுதியில் உள்ள 2,52,830 குடியிருப்புகளில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் முதல் நிலை சேகரிப்பு பணிக்கு இலகு ரக மோட்டார் வாகனங்கள் 276 எண்ணிக்கையும், பேட்டரி மூலம் இயக்கும் வாகனங்கள் 65 எண்ணிக்கையும் பயன்பாட்டில் உள்ளன. இரண்டாம் நிலை சேகரிப்பு பணிக்கு கீழ்க்கண்ட வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.

1. காம்பாக்டர் வாகனங்கள் - 14
2. டிப்பர் லாரி - 14
3. LCV - 183
4. BOV - 45

திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கு மொத்தம் 516 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அளவு கோலின்படி தேவைப்படும் கூடுதல் தூய்மை பணியார்கள் - 1528 வெளிக்கொணர்வு முகமை மூலம் வழங்கப்பட்டு தூய்மை பணிகள் தொய்வின்றி சிறப்புடன் செய்யப்பட்டு வருகிறது.

**நகர்ப்புற சுகாதார மையங்கள்** :-

தாம்பரம் மாநகராட்சியில் 9 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வந்தன. கடந்த ஆண்டில் 4 கிராமப்புற சுகாதார நிலையங்கள் கூடுதலாக இணைக்கப்பட்டு, தற்போது 13 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் மக்களுக்கு சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

நகர்புற மக்களின் தேவைகள் மற்றும் பல்வேறு சுகாதார தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, 13 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 9 நகர்புற நலவாழ்வு மையங்கள் (U-HWC), 16 துணை சுகாதார மையங்கள் மற்றும் 53 செக்டார்கள், செயல்பட்டு வருகின்றன. 11 துணை சுகாதார நிலையங்கள் நலவாழ்வு மையங்களாக செயல்படுகின்றன. நகர்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மூலம், புறநோயாளிகள் பிரிவு பிரசவம், கர்ப்பிணி பெண்களுக்கான சேவை, அவசர மருத்துவ உதவிகள், இரத்தபரிசோதனைகள், கர்ப்பகால ஸ்கேன், அனைத்து சேவைகளும் வழங்கபட்டு வருகின்றன.

நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், மாலை நேரங்களில் பல்நோக்கு மருத்துவ சிகிச்சை பிரிவு (Poly Clinic) செயல்பட்டு வருகின்றன. தாம்பரம் மாநகராட்சியில் பம்மல், கீழ்க்கட்டளை, செம்பாக்கம், இரங்கநாதபுரம், பூண்டி பஜார் ஆகிய 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்நோக்கு சிகிச்சை பிரிவு (Poly Clinic) செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்க்கண்ட விவரப்படி, இதுவரை மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பல்நோக்கு மருத்துவ சிகிச்சை பிரிவு (Poly Clinic Speciality) | பயனாளிகளின் எண்ணிக்கை (2022 – 2023) |
|---|---|---|
| 1 | பொது மருத்துவம் | 1215 |
| 2 | மகப்பேறு மருத்துவம் | 1583 |
| 3 | குழந்தை நல மருத்துவம் | 1461 |
| 4 | கண் மருத்துவம் | 974 |
| 5 | பல் மருத்துவம் | 1596 |
| 6 | இயன்முறை மருத்துவம் | 1322 |
| 7 | தோல் மருத்துவம் | 2174 |
| 8 | மனநலம் மருத்துவம் | 122 |

**<u>தாய் சேய் நலத்திட்டம்</u>** :-

அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்க்ளுக்கும் பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்பு, பிரசவகால பராமரிப்பு மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு வழங்கவும், குழந்தை வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை நட்புடனும், தரமாகவும் வழங்கவும், பல்வேறு தேசிய சுகாதார திட்டங்கள் நமது மாநிலத்தில் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு :

- தாய்சேய் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலத்திட்டம் (RMNCH-A)
- இரத்த சோகை தடுப்பு திட்டம் (Anemia Mukht Bharat)
- கர்ப்பிணி தாய்மார்களை பதிவு செய்து, PICME எண் வழங்குதல்.
- கர்ப்ப கால இரண ஜன்னி, தொண்டை அடைப்பான் (Inj. Td) தடுப்பூசி
- சிறப்பு தாய்சேய் நல முகாம் (PMSMA) – பிரதிமாதம் 9 மற்றும் 24 ம் தேதி.
- கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இரும்பு சத்து மற்றும் கால்சியம் சத்து மாத்திரைகள் வழங்குதல்.
- கர்ப்பிணி பெண்களுக்கு சர்க்கரை, தைரொய்ட், HIV, ஹெப்பாடிட்டீஸ்-B முதலிய பரிசோதனைகள் செய்தல்.
- புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு வீடு சென்று பராமரிப்பு (HBNC)
- இளம் குழந்தைகளுக்கு வீடு சென்று பராமரிப்பு (HBYC)
- இளம் குழந்தைகளுக்கு உணவூட்டும் முறை குறித்த விழிப்புணர்வு (IYCF)
- ஜனனி சிசு சுரக்ஷ யோஜனா (JSSK)

  இலவச பிரசவம் / அறுவை சிகிச்சை (Ceasarean)

  இலவச பரிசோதனைகள்

  இலவச மருந்துகள்

  இலவச உணவு

  பிரசவத்திற்கு பின் இலவசமாக வீட்டிற்க அழைத்து செல்லும் வாகன வசதி
- ஜனனி சுரக்ஷ யோஜனா (JSY) – நகர்ப்புற மருத்துவ மனைகளில் பிரசவித்த தாய்மார்களுக்கு ரூ.600/- ஊக்கத்தொகை
- குழந்தைகளுக்கான வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் (IDCF)
- குழந்தைகளுக்கான நிமோனியா காய்ச்சல் தடுப்பு திட்டம் (SAANS)
- பிரசவித்தவுடன் தாய்ப்பால் வழங்குதல் (MAA) / Baby friendly hospital initiative (BFHI)
- புதிதாகப் பிறந்த மற்றும் குழந்தை பருவ நோய்களின் ஒருங்கிணைந்த மேலாண்மை (IMNCI)

- தேசிய குடற்புழு நீக்கநாள் (NDD)
- தாய் சேய் பாதுகாப்பு மற்றும் தனித்துவ பராமரிப்பு (SUMAN)
- அனைவருக்கும் தடுப்பூசித் திட்டம் / இந்திர தனுஷ்
- தேசிய குழந்தைகள் நலத் திட்டம் (RBSK)
- தேசிய வளரிளம் பருவத்தினர் நலத்திட்டம் (RKSK)

குடும்ப நலத்திட்டம் , குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு தடுப்பூசி திட்டம் ஆகிய பணிகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எட்டப்பட்டுள்ளது, அறிக்கையாண்டில் 10.813 கர்ப்பிணி தாய்மார்கள் நகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு அனைத்து அரசு நலத்திட்டங்களும் வழங்கப்பட்டது. நகர ஆரம்ப சுகாதார மையங்களில் மொத்தம் 245 தாய்மார்களுக்கு பிரசவம் நடைபெற்றுள்ளது.

**<u>டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு உதவித்திட்டம்</u>** :-

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்சுகு ரூ. 14,000 பணப்பயனாக பயனாளியின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய 2000 மதிப்புள்ள இரண்டு ஊட்டச்தத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது, அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.1,92,70000 உதவித் தொகை மற்றும் 3969 ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**<u>தடுப்பூசி பணிகள்</u>** :-

நாடு தழுவிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் போலியோ, காசநோய், தட்டம்மை போன்ற 12 வகையான நோய்களிலிருந்து கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 11,134 கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் 9539 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

**<u>குழந்தை நல பரிசு பெட்டகம்</u>** :-

அம்மா குழந்தை நல பரிசு பெட்டகத் திட்டம் 8.9.2015 முதல் அனைத்து அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் துவங்கப்பட்டு, பிறக்கும் பச்சிளம் குழந்தைகள் ஆரோக்கியமாகவும், நலமுடனும் இருப்பதாற்காக, குழந்தை பிறந்தவுடன், பிரசவித்த தாய்மார்களுக்கு இப்பெட்டகம் வழங்கப்படுகிறது. அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம் பின்வரும் 16 பொருட்களை கொண்டதாகும். அவையாவன: குழந்தைக்கான துண்டு, குழந்தை உடை, குழந்தை படுக்கை, குழுந்தைக்கான கொசுவலை, குழந்தை நாப்கின், குழந்தை எண்ணெய், குழந்தை குளியல் திரவம், குழந்தை குளியல் சோப்பு , குழந்தை சோப்பு டப்பா, குழந்தை நகவெட்டி, குழந்தை கிலுகிலுப்பை, குழந்தை பொம்மை,

கை கழுவும் திரவம், குளியல் சோப்பு, சௌபாக்கியா சுண்டி லேகியம் மற்றும் இவையனைத்தையும் பாதுகாப்பாக வைக்கும் பெட்டகப் பை ஆகியனவாகும். அறிக்கையாண்டில் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த 245 குழந்தைகளுக்கு இந்த பெட்டகம் வழங்கப்பட்டது.

## இளம் சிறார் நலத்திட்டம் (RBSK) :-

இத்திட்டம் பிறந்த குழந்தைகள் முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உடல் பரிசோதனை மற்றும் 30 வகையான நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, தேவைப்படும் சிகிச்சை அளிப்பதனை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது. அறிக்கையாண்டில் 23 ஆரம்ப பள்ளி குழந்தைகள், 34 நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளி குழந்தைகள் ஆண் மற்றும் பெண் மருத்துவ குழுக்கள் (RBSK) மூலம் பரிசோதனை செய்யப்பட்டு, திறன் மேம்பாட்டு ஆலோசனைகள், மருத்துவ சிகிச்சை மற்றும் மேற்பரிந்துரை தேவைப்பட்ட குழந்தைகளுக்கு மாவட்ட ஆரம்ப நிலை இடையூட்டு மையம் (DEIC) மூலம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

## வளரிளம் பருவத்தினர் நலத்திட்டம் (RKSK) :-

வளரிளம் பருவத்தினரின் நலனை மேம்படுத்த வாராந்திர இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகள் வழங்குதல், பருவமடைந்த வளரிளம் பெண்களுக்கு இலவச சானிடரி நாப்கின் வழங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் குடும்ப நல சேவைகள், மனநல அலோசனைகள் அளித்தல் போன்ற சேவைகள் வழங்கப்படுகிறது.

வாராந்திர இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகள், வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் வளரிளம் பருவ ஆண் மற்றும் பெண் மாணவ மாணவியருக்கு நோடல் (Nodal) ஆசிரியர் மூலம் வழங்கப்படுகிறது. பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு அங்கன்வாடி ஆசிரியர் மூலம் வழங்கப்படுகிறது. 2022-2023 ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 61,219 வளரிளம் பருவத்தினர் பயனடைந்துள்ளனர்.

## குடும்ப நலத்திட்டம் :-

அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்கு நிரந்தர மற்றும் தற்காலிக குடும்ப நல சேவைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் நிரந்தர குடும்ப நல முறைகளான தழும்பில்லாத நவீன ஆண் குடும்ப நல அறுவை சிகிச்சை, பெண்களுக்கு (மினி லேப் / லேப்ரோஸ்கோப்பி போன்றவை) அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்காலிக குடும்ப நல முறைகளான ஆணுறை, பெண்களுக்கு கருத்தடை வளையம், அந்தாரா ஊசி (மற்றும்) சாயா மாத்திரைகள் போன்றவை முறையாக மருத்துவரின் ஆலோசனைப்படி அளிக்கப்பட்டு வருகிறது.

## மாதவிடாய் கால சுகாதார திட்டம் :-

இத்திட்டத்தின் கீழ் பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத பருவம் அடைந்த வளர் இளம் பெண்கள் அரசு மருத்துவமனைகளின் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் உள் நோயாளிகள் ஆகியோருக்கு 'புதுயுகம்' என்ற பெயரில் இலவச சானிடரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன.

பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத வளரிளம் பெண்களுக்கு ஆறு சானிடரி நாப்கின் கொண்ட ஒரு பை வீதம் 3 பைகள் இரண்டு மாதத்திற்கு வழங்கப்படுகிறது, அரசு மருத்துவமனையில் 15-49 வயது வரை உள்ள பெண் உள் நோயாளிகளுக்கு நாடாவுடன் கூடிய 6 நாப்கின்கள் கொண்ட ஒரு பை வழங்கப்படுகிறது. அரசு மருத்துவனைகளில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு நாடாவுடன் 6 நாப்கின்கள் கொண்ட ஒரு பை வீதம் 7 பைகள் வழங்கப்படுகிறது.

அறிக்கையாண்டில், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத 15227 வளரிளம் பெண்களுக்கு 45681 சானிடரி நாப்கின் பைகள் வழங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த 4257 தாய்மார்களுக்கு 29799 நாப்கின் பைகள் வழங்கப்பட்டுள்ளது.

## தொற்று நோய் மேலாண்மை :-

தனி மனிதன் அல்லது பிற விலங்கு மூலம், நீர் , கொசு மற்றும் நோய் பரப்பும் பூச்சிகள் மூலம் பரவக்கூடடிய நோய்கள் தொற்று நோய்கள் ஆகும்.

## டெங்கு தடப்பு நடவடிக்கை :-

இம்மாநகராட்சியில் கொசு ஒழிப்பு மற்றும் யானைக்கால் தடுப்புத் திட்டத்தின் கீழ், 2 களப்பணியாளர்கள், 20 பணியாளர்கள் மற்றும் 160 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர், இப்பணியாளர்களை கொண்டு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் புகை தெளிப்பான் மூலம் முதிர்ந்த கொசுக்கள் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மழைக்காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்கள் அமர்த்தப்பட்டு கொசு உற்பத்தியாகும் ஆதாரங்களை அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

## கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை :-

மாநகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கிருமி நாசினி தெளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அறிக்கையாண்டில் கொரோனா தொற்று காரணமாக இறப்பு ஏதுமில்லை.

இந்த நடப்பாண்டில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 770 நோயாளிகள் உரிய சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். மலேரியாவால் ஒரு நபரும், ஜப்பானிய மூளைக்காய்ச்சலால் ஒரு நபரும், லெப்டோஸ்பைரோஸிஸ்-சால் ஒரு நபரும் பாதிக்கப்பட்டு உரிய சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

மேலும் டெங்கு மற்றும் பிற தொற்று நோய்கள் மேலும் பரவாமல் இருக்க திட/திரவ கழிவு மேலாண்மை, தண்ணீர் மாதிரிகளை ஆய்வு செய்தல், பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதி செய்தல், கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் போன்ற களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

**<u>குடற்புழு நீக்கம் திட்டம்</u>** :-

குழந்தைகளிடையே காணப்படும் குடற்புழுத்தொற்றினை கட்டுப்படுத்தி, அதன் மூலம் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் இரத்த சோகையை தடுப்பதற்கும், ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் அதிகரிக்கவும் இத்திட்டம் உதவுகிறது. அனைத்து அங்கன்வாடி மையங்கள், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் 1 முதல் 19 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் வருடத்திற்கு இருமுறை குடற்புழு நீக்க மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் 2,99,175 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**<u>தீவிர இருவார கால வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம்</u>** :-

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கு, 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பிற்கான முக்கிய காரணத்தை கருத்தில் கொண்டு, தீவிர இருவார கால வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் உள்ள அனைத்து குடும்பங்கள் மூலம் உப்பு சக்கரை கரைசல் (ORS) பொட்டலம் விநியோகிக்கப்படுகிறது. வயிற்றுப்போக்குள்ள குழந்தைகளுக்கு ORS மற்றும் ஜிங்க் மாத்திரைகள் சுகாதார துறையினரின் மேற்பார்வையில் வழங்கப்படுகிறது. மேலும் கை கழுவுதலின் முக்கியத்துவம் மற்றும் செயல்முறை விளக்கம், தாய்பாலின் முக்கியத்துவம், சுத்தமான குடிநீர் பருகுதல் போன்ற வயிற்றுப்போக்கு தடுப்பிற்கான முக்கிய தகவல்களை தாய்மார்கள் மற்றும் குடும்பத்தினருக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

அறிக்கையாண்டில் ஐந்து வயதிற்குட்பட்ட 70,422 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**<u>தொற்றா நோய்கள்</u>** :-

சமூகத்தில் மாறிவரும் வாழ்க்கை முறையின் பிரதிபலிப்பாக உயர் இரத்த அழுத்தம் நீரிழிவு நோய், இருதய நோய், கருப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றன.

"**மக்களைத் தேடி மருத்துவம்**" திட்டத்தின் மூலம், 18 வயதும், அதற்கு மேற்பாட்டோருக்கு உயர் இரத்த அழுத்த பரிசோதனை, 30 வயதும் அதற்கு மேற்பட்டோருக்கு நீரிழிவு நோய், கருப்பை வாய், மார்பக புற்று நோய்க்கான நோய் கண்டறியும் ஆய்வுகள் சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பு சேவைகள் அளிக்கப்படுகிறன. ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை 4,63,760 தனி நபர்கள் பரிசோதனை செய்யப்பட்டதில் 9,839 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்த நோய்

கண்டறியப்பட்டு சிகிச்சை மற்றும் தொடர் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. பெண் சுகாதார தன்னார்வலர்களை கொண்டு 45 வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களுக்காக மருத்துவகளை அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்குதல், நோய் ஆதரவு சேவைகள், இயன்முறை மருத்துவ சேவைகள், சிறுநீரக நோயாளிகளை பராமரித்தல், குழந்தைகளின் பிறவிக்குறைபாடுகளை கண்டறிந்து தெரிவித்தல், போன்ற அனைத்து சுகாதார தேவைகளையும் வழங்குவதுடன், தொடர் கண்காணிப்பு சேவைகளும் அளிக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>நோயின் வகை</th><th>பரிசோதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை</th><th>நோய் தாக்கம் கண்டறியப்பப்பட்டோரின் எண்ணிக்கை</th><th>மக்களை தேடி மருத்துவ மருந்து பெட்டி பெற்றவர்களின் எண்ணிக்கை (45 வயதிற்கு மேற்பட்டோருக்கு )</th></tr>
<tr><td>1</td><td>உயர் இரத்த அழுத்தம்</td><td>527337</td><td>10353</td><td rowspan="5">16625</td></tr>
<tr><td>2</td><td>நீரிழிவு நோய்</td><td>373510</td><td>9273</td></tr>
<tr><td>3</td><td>உயர் இரத்த அழுத்தம் / நீரிழிவு நோய்</td><td>527337</td><td>8044</td></tr>
<tr><td>4</td><td>மார்பக புற்றுநோய்</td><td>73543</td><td>32</td></tr>
<tr><td>5</td><td>கருப்பை வாய் புற்றுநோய்</td><td>26948</td><td>13</td></tr>
</table>

## <u>வருமுன் காப்போம் திட்டம்</u> :-

நோய்களை வருமுன் தடுக்கும் வகையிலும். நலவாழ்வு சேவைகளை நாடிச் சென்று பெறும் அணுகு முறையை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கத்திலும் இத்திட்டம் துவங்கப்பட்டது. வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, குழந்தை நலம், மகப்பேறு நலம், கண் மருத்துவம், காது மூக்கு (ம) தொண்டை மருத்துவம், எலும்பியல், மற்றும் பிற சிறப்பு மருத்துவ வல்லுநர்கள் மூலம் பரிசோதனை, சிகிச்சை மற்றும் மேற்பரிந்துரை சேவைகள் வழங்கப்படுகிறது, 2022-2023 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சியில் 4 வருமுன் காப்போம் முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 4122 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

## <u>சிகிரெட் மற்றும் இதர புகையிலை பொருட்கள் தடுப்பு COTPA</u> :-

சிகிரெட் மற்றும் இதர புகையிலை பொருட்கள் தடுப்புச்சட்டம் 2003. புகையிலை பொருட்களின் உபயோகத்தினை குறைக்கவும், புகையிலையினால் விளையும் தீமைகள் மற்றும் பாதிப்புக்களிலிருந்து இளைஞர்கள் மற்றும் மக்களை காப்பாற்றவும் இத்தடுப்பு சட்டம் இயற்றப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் புகையிலை பொருட்களை விற்பனை செய்தல், 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு புகையிலை விற்பனை செய்தல் போன்ற சட்ட மீறல் செயல்களுக்கு அபராதம் விதித்தல், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது மற்றும் புகையிலை இல்லாத கல்வி நிறுவனங்கள் என சான்றளிப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**<u>நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகம்</u>** :-

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒரு நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகம் அமைப்பதற்கு 15 ஆம் நிதி ஆணையத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 64 ஆய்வக பரிசோதனைகள் செய்யப்படுகின்றது. இந்த ஆய்வகத்தில். ஹப் அண்ட் ஸ்போக் உருப்படிவம் (Hub and Spoke Model) மூலம் 96 வகையான பரிசோதனைகள் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

**<u>பிறப்பு இறப்பு பதிவு</u>** :-

இம்மாநகராட்சி பகுதியில் 15 பிறப்பு இறப்பு பதிவாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரால் பிறப்பு இறப்பு பதிவு மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது. கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் இணையதளத்தின் வாயிலாக பிறப்பு இறப்பு சான்று பதிவிறக்கம் செய்ய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் 6627 - பிறப்புகள், 5083 - இறப்புகள் மற்றும் 15- இறந்து பிறந்தவை நிகழ்ந்துள்ளவை பதிவாகி உள்ளது.

**<u>தொழில் உரிமம் (Trade Licence) வழங்குதல்</u>** :-

தாம்பரம் மாநகராட்சி பகுதியில் இயங்கும் வணிக நிறுவனங்களுக்கு தொழில்களுக்கான உரிமம் கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர், மாநகர நல அலுவலர் ஆய்வு செய்து பின் உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளது. உரிமையாணை கோரும் விண்ணப்பம் இணைய வழியாக (tnurbanepay.tn.gov.in) கட்டணம் செலுத்தி உரிமம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் 1935 எண்ணிக்கை கடைகளுக்கு ரூ.87,44, 650 தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

**<u>கால்நடை தடுப்பு பணிகள்</u>** :-

தாம்பரம் மாநகராட்சி பகுதியில் தெருவில் சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்த மாடுகள் வளர்போருக்கு தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் பிரிவுகளின் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு இடையூறாக சுற்றித்திரிய விடப்படும் மாடுகளை கட்டுப்படுத்திட, மாடுகளை பிடித்து ஒரு மாட்டிற்கு ரூ.2000/- அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. தற்போது மாடுகளை பிடிக்க, 2 மாடுபிடி வாகனங்களும், 2 கால்நடை பராமரிக்கும் கூடங்கள் இடம் தேர்வு செய்யப்பட்டு பராமரிக்கும் கூடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தெருநாய்கள் இனப் பெருக்க தடை :-**

தாம்பரம் மாநகராட்சி பகுதியில் தெருக்களில் பராமரிப்புமின்றி சுற்றி திரியும் தெரு நாய்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு விலங்குகள் (நாய்) இனப்பெருக்க தடை விதிகளின் படி நாய்களை பிடித்து இனப்பெருக்க தடை அறுவை சிகிக்சை செய்யப்பட்டு. வெறி நாய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டு பிடிக்கப்பட்ட இடத்திலேயே விடப்படுகிறது. இப்பணிக்காக அனகாபுத்தூர், பாரதிபுரம், குண்டுமேடு ஆகிய இடங்களில் நாய்கள் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பன்றி தடுப்பு பணிகள் :-**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பன்றிகளை வளர்பதற்கும், பொது இடங்களில் திரியவிடுவதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு சுற்றித்திரியும் பன்றிகள் மூலம் பரவக்கூடிய தொற்றுநோய்கள் அபாயத்தினை கருத்திற்கொண்டு, மாநகராட்சி பகுதியிலுள்ள 5 மண்டலங்களிலும் பராரியாய் சுற்றித் திரியும் பன்றிகளை ஒப்பந்த அடிப்படையில் பிடித்து வனப்பகுதியில் விடப்பட்டு வருகிறது.

**கட்டிட இடிபாட்டுக் கழிவு :-**

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உருவாகும் கட்டிட இடிபாட்டுக் கழிவுகளை முறையாக இறுதியாக்கம் செய்ய, கட்டிட கழிவுகள் சேமிப்பு கிடங்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, அனைத்து கட்டிட கழிவுகளை அங்கு இறுதியாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டிட கழிவுகள் தேவைப்படும் பொது மக்களும் அங்கு பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

**மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவதற்கு தடை :-**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2013ம் ஆண்டு மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றும் தடை சட்டத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் 40 எண்ணிக்கை கழிவு நீர் அகற்றும் வாகனங்களுக்கு உரிமம் வழங்கி, உரிய பாதுகாப்பு முறைகளின் படி, கன்னடபாளையம் கழிவு நீர் வடிகால் அமைப்பில் முறையாக அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

**சமுதாய கழிப்பிடம் / பொது கழிப்பிடம்**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், 70 வார்டுகளில் உள்ளடங்கிய 5 மண்டலத்திற்கு சேர்த்து 28 பொது கழிவறை, 56 சமுதாய கழிவறை (ம) 16 சிறுநீர் கழிவறை பாதுகாப்பு பணி மற்றும் தூய்மைப்பணி மேற்கொள்ள, தூய்மை பணியாளர்களை கொண்டு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணி மேற்கொண்டு வருகிறது. மேலும் கழிவறைகளை இரு சுழற்சி முறையில்

பாதுகாத்திடவும், அவ்வப்போது கிருமி நாசினிகள், கிளீனர்கள் போட்டு சுத்தம் செய்து வரப்படுகிறது.

## அரசு உதவி பெறும் பள்ளி / மாநகராட்சி பள்ளிகளின் கழிவறை (ம) சுற்றுப்புற பராமரிப்பு :-

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், 70 வார்டுகளில் உள்ளடங்கிய 5 மண்டலத்திற்கு சேர்த்து 46 மாநகராட்சி பள்ளி (ம) அரசு உதவி பெறும் பள்ளி கழிவறை மற்றும் சுற்றுப்புற பராமரிப்பு பணி மேற்கொள்ள, வெளிக்கொணர்வு முகமை மூலம் 138 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர், இப்பணியாளர்களை கொண்டு கழிவறை தூய்மை பணி மற்றும் சுற்றுப்புற பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பொது குறிப்புகள்

தாம்பரம் மாநகராட்சி இவ்வாண்டில் தனது வரம்பிற்குட்பட்ட நிதி நிலைமைக்கேற்ப தேவையான அடிப்படை வசதிகளை செய்துள்ளது. நகரத்தினை சுத்தமாக பராமரிக்கவும், தெருக்கள் மற்றும் விளக்குகள் பராமரிப்பதிலும் முழுமையான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தாம்பரம் மாநகராட்சி நிர்வாகம் சிறப்பாகவும், ஆக்கப் பூர்வமாகவும் செயல்பட தொடர்ந்து உறுதுணையாக இருந்து வரும் உட்புற, வெளிப்புற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்

தாம்பரம் மாநகராட்சி